## ஒன்றிய அரசின் வக்பு வாரியச் சட்டத்திற்கு எதிராக சட்டமன்றத்தில் முதல் தீர்மானம் கொண்டு வந்தவர் முதல்வர் மு.க.ஸ்டாலின்!

# அரசியல் சட்ட மாண்புகளை படுகொலை செய்து இஸ்லாமியர்களின் உரிமைகளைப் பறிக்கும் நாசிச செயலை நிறுத்துக!

## மக்களவையில் - கழக துணைப் பொதுச் செயலாளர் ஆ.இராசா கண்டன உரை!

புதுடெல்லி, ஏப்.6-

**நாடாளுமன்ற மக்களவையில் கழகக் கொறடாவும் கழகத் துணைப் பொதுச் செயலாளருமான ஆ.இராசா அவர்கள் வக்பு வாரிய திருத்தச் சட்ட மசோதா மீது உரை யாற்றும்போது “ஒன்றிய அரசின் வக்ஃபு வாரிய சட்டத்திற்கு எதிராக சட்டமன்றத்தில் முதல் தீர்மா னம் கொண்டு வந்தவர் தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள்” என்றும் “அரசியல் சட்ட மாண்புகளை படுகொலை செய்து இஸ்லாமியர்க ளின் உரிமைகளை பறிக்கும் நாசிச செயலை நிறுத்த வேண்டும்” என்றும் கூறினார்.**

இது குறித்து மக்களவையில் ஆ.இராசா அவர்கள் பேசியதாவது:-

திராவிட முன்னேற்றக் கழகத்தின் நிலைப்பாட்டை இங்கே எடுத்துரைக்க எனக்கு வாய்ப்பளித்த அவைத்தலைவர் அவர்களுக்கு நன்றி.

சிறுபான்மை நலத்துறை அமைச்சர் கிரண் ரிஜிஜு பேசியதை முழு கவனத்துடன் கேட்டுக் கொண்டிருந்தேன். தனது துணிச்சலைப் பற்றி அவரே புகழ்ந்து கொண்டார். அவர் எப்படி இவ்வ ளவு ‘துணிச்சலுடன்’ நாடாளுமன்றத்தில் அதீத கற் பனை கட்டுக்கதைகளை (Cock and Bull Story) சொல்லிக்கொண்டிருக்கிறார் என நான் வியக் கிறேன்.

அமைச்சருக்கு நான் துணிச்ச லுடன் சவால் விடுகிறேன். நீங்கள் இன்று பேசியதை நாளை எழுத்து வடிவத்தில் எடுத்து வக்பு நாடாளுமன்ற கூட்டுக் குழு அறிக்கை குழுவிற்கு முன்பு அளிக்கப் பட்ட சாட்சியங்கள் மற்றும் ஆவணங்களை ஒப்பீடு செய்து பாருங்கள். இரண்டு பதிவுகளும் ஒத்துப் போகுமானால் நான் எனது நாடாளுமன்ற உறுப் பினர் பதவியிலிருந்து விலகவும் தயாராக இருக்கி றேன்.

### உங்கள் கட்டுக்கதை உடைக்கப்பட்டுவிட்டது!

எது இந்த மசோதாவை கொண்டுவர உங் களை உந்தித்தள்ளியது என நீங்கள் இந்த அவை யில் ஏற்கனவே கூறியதை நினைவு படுத்திப் பாருங்கள். இந்த மசோதாவை முதலில் தாக்கல் செய்தபோது என்ன சொன்னீர்கள், தமிழ் நாட்டில் திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் ஒரு கிரா மத்தில் ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்களை வக்பு சொத்துக்களாக அறிவிக்கப்பட்டிருப்பதாக சொன்னீர்கள்; அவைகளை போன்ற லட்சக்கணக் கான ஏக்கர் நிலங்களை மீட்கவே இந்த மசோதா என்றும் சொன்னீர்கள். நாடாளுமன்ற கூட்டுக் குழு தமிழ்நாட்டிற்கு வந்தது. மாவட்ட ஆட்சியர், வருவாய்துறை செயலாளர், வக்பு வாரிய தலை வர் ஆகியோர் குழுவுக்கு முன்பாக வாக்கு மூலம் கொடுத்தார்கள். மூவரும் நாடாளுமன்ற கூட்டுக்குழு தலைவரை சந்தித்தார்கள். கூட்டுக் குழுவின் தலைவர் இந்த அவையில்தான் இருக்கி றார். ஆதாரங்களை அகற்றிவிட்டார்கள் எனும் உங்கள் கட்டுக்கதை உடைக்கப்பட்டுவிட்டது. உடனே இப்போது வேறு புதிய பொய்யான புனை வுக்கதையுடன் வந்திருக்கிறீர்கள்.

அவைத் தலைவர் அவர்களே, இங்கே வேடிக்கை இதுதான். நாடாளுமன்றத்தில் ஒரு இஸ்லாமிய உறுப்பினர்கூட இல்லாத ஒரு கட்சி தான் சிறுபான்மையினரின் உரிமைகள் காக்கப் பட ஒரு மசோதாவை கொண்டு வந்திருக்கிறது. அவர்கள் கட்சியிலிருந்து இந்த மசோதாவை ஆத ரிக்க ஒரு இஸ்லாமிய நாடாளுமன்ற உறுப்பினர் கூட இல்லை. ஒரு இஸ்லாமிய நாடாளுமன்ற உறுப்பினருக்குகூட வாய்ப்பளிக்க மனமில்லாத வர்கள்தான் மதச்சார்பின் மையை பாதுகாப்பது குறித்து எங்களுக்கு பாடம் எடுக்கிறார்கள். இன்று நமது இந்திய நாடாளுமன்றத்தில் ஒரு குறிப்பிடத்தக்க நாள். மதச்சார்பில்லாத இந்த நாடு நம் சுதந்திர போராட்ட தியாகிகளும் அரசியல் சட் டத்தை உருவாக்கிய நம் தேசத்தலைவர்களும் சுட்டிக்காட்டிய வழியில் பயணிக்க போகிறதா அல் லது வகுப்புவாத சக்திகள் முடிவு செய்ததை போல் மனிதகுலத்திற்கு எதிரான போரை சந்திக்க போகி றதா எனும் தலையெழுத்தை தீர்மானிக்கும் நாள், இந்த நாள். தமிழ்நாடு சட்டப்பேரவையில் இச்சட் டம் தொடர்பாக நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை குறிப்பிட்டு எனது உரையை தொடங்க விரும்பு கி றேன். வக்பு மசோதாவிற்கு எதிராக தமிழ்நாடு சட் டப்பேரவையில் தமிழ்நாடு முதலமைச்சர் மு. க. ஸ்டாலின் அவர்கள் ஒரு தீர்மானத்தை முன்மொ ழிந்தார். அத்தீர்மானம் ஒரு மனதாக நிறை வேற்றப்பட்டது. எங்கள் நிலைப்பாடு இதுதான். தீர் மானத்தின் வரிகள் இவை:

### உச்சநீதிமன்றத் தீர்ப்புக்கு எதிரானது!

“நாடாளுமன்றத்தில் முன்மொழியப்பட்ட வக்பு திருத்த மசோதா, சிறுபான்மையினர் உரிமைகள், மத சுதந்திரம் மற்றும் அரசியலமைப்பிற்கு எதிரா னது; வக்பு உருவாக்கப்பட்டதன் நோக்கத்திற்கு எதிரானது; உச்சநீதி மன்ற தீர்ப்புக்கு எதிரானது; தேவையற்றது மற்றுமின்றி குழப்பமானதும் கூட. இதை நிறைவேற்றி னால் வக்பு நிறுவனங்களை முடக்குவதுடன் இஸ்லாமிய சமூகத்திற்கு கேடுகள் விளையும். அதனால் தமிழ்நாடு சட்டப்பேரவை வக்பு திருத்த மசோதாவை கைவிடுமாறு ஒன்றிய அரசை வலியுறுத்துகிறது”

### நாட்டின் ஒருமைப்பாடு கேள்விக்குள்ளாக்கப்படும்!

அவைத் தலைவர் அவர்களே, மக்க ளின் அரசியல் மற்றும் நாட்டின் இறையாண்மை யின் மாண்புகள் (Political Will and Sovereign Power) இந்த அவையில் பிரதிபலிப்பதுபோல் அல் லது பிரதி பலிப்பதாகக் கருதப்படுகிறது. அதே நேரத் தில் மாநில சட்டமன்றத்தில் பிரதிபலிக்கும் தமிழ் நாட்டின் அரசியல் விருப்ப மாண்பு முற்றிலும் வேறு மாதிரி உள்ளது! இந்தவேறுபாட்டையும் முற் றிலும் எதிர்மாறான கூறுகளையும் நீங்கள் ஏற்றுக் கொள்ளப்போவதில்லை என்றால், பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளவில்லை என்றால், இந்த நாட் டின் ஒருமைப்பாடு கேள்விக்கு உள்ளாக்கப்படும்; தயவுசெய்துஅதைக் கவனத்தில் கொள்ளுங்கள்.



நாட்டின் சுதந்திரத்திற்கு பின் 1949இல் அரசிய லமைப்பு சட்டம் உருவாகிக் கொண்டிருந்தபோது, உங்களுக்கு பிடித்த தலைவராக நீங்கள் தவறாக சித்தரித்துக் கொள்ளும் இந்தியாவின் இரும்பு மனி தர், சர்தார் வல்லபாய் பட்டேல் அவர்கள் அரசியல மைப்பு நிர்ணய சபையில் சிறுபான்மையினருக் கான ஆலோசனைக் குழுத் தலைவராக இருந்தார் என்பதை நினைவூட்ட விரும்புகிறேன். பட்டேல் அவர்கள் சிறுபான்மை மக்களின் உரிமைகளை வரையறுக்கும் குழுவின் தலைவராக இருந்த போது, அந்தக் குழுவின் உறுப்பினர்கள் யார்? இந்திய ஜனாதிபதியாக பின்னாளில் வந்த அவைத் தலைவர் டாக்டர் ராஜேந்திரபிரசாத், பின்னர் இந் திய பிரதமராக தேர்ந்தெடுக்கப்பட்ட பண்டித ஜவ ஹர்லால் நேரு, டாக்டர்அம்பேத்கர் மற்றும் டாக்டர் முன்ஷி. இதற்கு சர்தார் வல்லபாய் படேல் தலைமை தாங்கினார். குழு பரிந்துரைகளை வரையறுத்து ஒருஅறிக்கையை 1949 மே 25 அன்று அரசியலமைப்பு அவையில் கொண்டு வந் தது. அந்த அறிக்கையை முன்மொழிந்து பட்டேல் பேசியதை இங்கே எடுத்துக்காட்ட விரும்புகிறேன்.

**“ஐந்து பேர் கொண்ட துணைக்குழுவை ஆலோச னைக்குழு நியமித்தது, அதில் நமது மதிப்பிற்குரிய ஜனாதிபதியும் உறுப்பினர்களில் ஒருவராக இருந் தார், பண்டிட்ஜவஹர்லால்நேரு, நான், முன்ஷி, மற் றும் டாக்டர். அம்பேத்கர் ஆகியோர் குழுவின் உறுப் பினர்களாக இருந்தோம். குழு பிப்ரவரியில் கூடி அதன் அறிக்கையை வழங்கியது”** என்று அவரே குறிப்பிட்டு விட்டு, அந்த அறிக்கைக்கான ஒப்பு தலை பட்டேல் கோரியபோது, அவர் பேசிய சில வரிகள் மிகுந்த தொடர்புடையன. எனவே, அதனை இங்கேமேற்கோள்காட்ட விரும்புகிறேன்:

**“விடுதலைக்குப்பின் நாட்டின் மாறிவரும் சூழ்நி லையில், மதச்சார்பற்ற அரசின் உண்மையான அடித் தளங்களைஅமைப்பது அனைவரின் நலனுக்காகவும் என்ற முடிவுக்கு அவர்கள், அதாவது முஸ்லிம்கள் உண்மையிலேயே நேர்மையாக வந்திருந்தால், பெரும்பான்மையினரின் நல்லெண்ணத்தையும் நியாய உணர்வின் மீதும் நம்பிக்கை வைப்பதுதான் சிறுபான்மை யினருக்கு நன்மை பயக்கும்.”** இது முதல் வரி! இதன் இரண்டாவது பகுதி மிகவும் முக்கியமானது; நான் மீண்டும் மேற்கோள் காட்டு கிறேன்:

**“பெரும்பான்மையினராக இருக்கும் நாமும் (இந் துக்கள்) சிறுபான்மையினர் என்ன உணர்கிறார்கள், அவர்கள் நடத்தப்படும் விதத்தில் நாம் நடத்தப்பட டால் எப்படி உணருவோம் என்பதைப் பற்றி சிந்திக்கவேண்டும். ஆனால் சில காலத்திற்கு பிறகு, இந்தநாட்டில் பெரும்பான்மை, சிறுபான்மை என்கிற வேறுபாடுகள் எல்லாம் மறந்து, இந்தியாவில் ஒரே ஒரு ‘இந்தியர்கள்’ என்ற சமூகம் மட்டுமே உள்ளது என்கிற எண்ணத்திற்கு வந்துவிடுவதே அனைவருக் கும் நல்லது. இதை கருத்தில் கொண்டு, ஆலோச னைக்குழுவின் அறிக்கையை பரிசீலிக்க வேண்டும் என்று நான் இந்த அவையில் முன்மொழிகிறேன்.”**

### சர்தார் பட்டேலின் மரபை அழிக்க விரும்புகிறீர்கள்!

இதுதான் அன்று அரசியலமைப்பு நிர்ணய சபையில் சர்தார் வல்லபாய் பட்டேல் அவர்களின் குரலாக ஒலித்தது. நாம் அரசியலமைப்பின் 75வது ஆண்டை கொண்டாடுகிறோம். இவ்வாறு உரையாற்றிய நாங்கள் சர்தார் பட்டேலின் மரபை தொடர விரும்புகிறோம். அரசியலமைப் பில் சர்தார் பட்டேலின் மரபை தொடர விரும்பும் நாங்கள் மசோதாவை எதிர்க்கிறோம், ஆனால் வல்லபாய் பட்டேலின் சிலையை மட்டும் உருவாக் கிவிட்டு அவருடைய மரபை அழிக்க விரும்புகிற நீங்கள் இந்த மசோதாவை ஆதரிக்கிறீர்கள். இது தான் வினோதம்!

அவைத் தலைவர் அவர்களே, இந்த வக்பு சட்டம் 1954இல் முதன்முதலில் இயற்றப்பட்டது.

அதன் பிறகு, 1959, 1964 மற்றும் 1969 இல் திருத்தப்பட்டது. பிறகு 1984இல் விரிவான திருத் தங்கள் மேற்கொள்ளப்பட்டது. மாண்புமிகு அமைச்சர் மற்றும் முன்வரிசையில் உள்ள ஆளுங்கட்சியினருக்கு எனது கேள்வி என்ன வென்றால், கடந்த காலங்களில் திருத்தங்கள் இந்த அவையில் கொண்டுவரப்பட்டபோதெல்லாம், அதற்கு ஒரு அடிப்படை (Basis) இருந்தது ; விவா தங்கள் இருந்தன; நாடாளுமன்றத்தின் ஒப்புதலின் அடிப்படையில் மட்டுமே அல்லது இந்திய ஜனாதி பதி அல்லது இந்திய பிரதமரின் ஒப்புதலின் அடிப்ப டையிலேயே தொடர்புடைய நிறுவனங்கள், அமைப்புகளுடன் ஆலோசனைகள் நடந்தன. 1970ஆம் ஆண்டு நாடாளுமன்றத்தால் நியமிக் கப்பட்ட வக்பு விசாரணைக்குழு சமர்ப்பித்த விரி வான அறிக்கையின்அடிப்படையில் வக்பு (திருத் தம்) சட்டம், 1984 நடைமுறைக்கு வந்தது.

> **பதவி விலகவும் தயார்!**
>
> **“சிறுபான்மை நலத்துறை அமைச்சர் கிரண் ரிஜிஜு பேசியதை முழு கவனத்துடன் கேட்டுக்கொண்டிருந்தேன். தனது துணிச்சலைப் பற்றி அவரே புகழ்ந்து கொண்டார். அவர் எப்படி இவ்வளவு ‘துணிச்சலுடன்’ நாடாளுமன்றத்தில் அதீத கற்பனை கட்டுக்கதைகளை (Cock and Bull Story) சொல்லிக்கொண்டிருக்கிறார் என நான் வியக்கிறேன்.**
>
> **அமைச்சருக்கு நான் துணிச்சலுடன் சவால் விடுகிறேன். நீங்கள் இன்று பேசியதை நாளை எழுத்து வடிவத்தில் எடுத்து வக்பு நாடாளு மன்ற கூட்டுக் குழு அறிக்கை குழுவிற்கு முன்பு அளிக்கப்பட்ட சாட்சியங்கள் மற்றும் ஆவணங்களை ஒப்பீடு செய்து பாருங்கள். இரண்டு பதிவுகளும் ஒத்துப் போகுமானால் நான் எனது நாடாளுமன்ற உறுப்பினர் பதவியிலிருந்து விலகவும் தயாராக இருக்கிறேன்.”**

### 14 ஆண்டுகளுக்குப் பிறகு ஏற்கப்பட்டது!

1970 ஆம் ஆண்டு ஒரு குழு அமைக்கப்பட்டு, அதன்அறிக்கை 14 ஆண்டுகளுக்குப் பிறகு ஏற்கப் பட்டது, அதன் அடிப்படையில் திருத்தங்கள் செய் யப்பட்டன. 1970 ஆம் ஆண்டின் ஆவணத்தைப் படித்தபோது எப்படிப்பட்ட ஒரு அருமையான மற் றும் விவேகமான விவாதம் இங்கே நடந்தது என நான்ஆச்சரியப்பட்டேன். அதையும் மீறி, 1970 ஆம் ஆண்டு வக்பு சட்டத் திருத்தங்களுக்கு எதிராக போராட்டங்கள் நடத்தப்பட்டன, பின்னர், 1984 ஆம் ஆண்டு அந்த திருத்தங்கள் நடைமுறைக்கு வந்தன. 1970ல் இவ்வளவு பரிந்துரைகள் செய்யப் பட்டிருந்தாலும், 1984ல் நாடாளுமன்றம் இரண்டு திருத்தங்களை மட்டுமே நடைமுறைப்படுத்த முடிந்தது; ஒன்று வழக்கிடுவதற்கான கால வரம்பு (Limitation) குறித்தது. இது வக்பு சொத்துக்களுக்கு 30 ஆண்டுகளாக நீட்டிக்கப்பட்டது; இரண்டாவது கைவிடப்பட்ட (Evacuee) சொத்துக்களுக்கும் கூட இச்சட்டம் பொருந்தும் என்பது. வேறு எந்த திருத் தங்களும் செயல்படுத்தப்படவில்லை; இந்துக்க ளின் எதிர்ப்பு காரணமாக அல்ல, மாறாக முஸ்லிம் களின் எதிர்ப்பு காரணமாக! இது நேருவின் அரசாங்கத்தால் நியாயமாக ஏற்றுக்கொள்ளப் பட்டது.

### 1995-ல் வக்பு சட்டம் நடைமுறைக்கு வந்தது!

அதன்பிறகு, 1995 ஆம் ஆண்டு வக்பு சட்டம் திருத்தப்பட்டது. அமைச்சருக்கும் இந்த அவைக் கும் நான் வலியுறுத்த விரும்புவது என்னவென் றால், இந்த திருத்தம் நடைமுறைக்கு வரும்போ தெல்லாம், நியாயமானஅடிப்படையில், சட்ட நிறுவனங்களால் வழங்கப்பட்ட அறிவுரைகள் அடிப்படையில், திருத்தங்கள் செய்யப்பட்டன. உதாரணமாக, 1995 ஆம் ஆண்டு வக்பு சட்டத்தை எடுத்துக்கொள்ளுங்கள். 1995 ஆம் ஆண்டு வக்பு சட்டம் எவ்வாறு நடைமுறைக்கு வந்தது? 1995 ஆம் ஆண்டு வக்பு சட்டத்தின்படி, ‘குறிக்கோள்கள் மற்றும் காரணங்களின்’ (Reasons and Objects) அறிக்கையின்பத்தி 2 இல் இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது:

**“வக்பு சட்டத்தில் விரிவானதிருத்தங்கள், வக்பு (திருத்தம்) சட்டம், 1984 மூலம் செய்யப்பட்டன; அவை பெரும்பாலும் அனைத்து மட்டங்களிலும் வக்பு களின் நிர்வாகம் குறித்து விசாரிக்க டிசம்பர் 1970 இல் அமைக்கப்பட்ட வக்பு விசாரணை க்க குழுவின் பரிந்துரைகளை அடிப்படையாகக் கொண் டவை மற்றும் வக்பு (திருத்த) மசோதா மீதான விவா தத்தின் போது உறுப்பினர்களால் நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்பட்ட கோரிக்கைக்கு பதிலளிக்கும்வித மாக இருந்தன.”** இதன்படி நாடாளுமன்றத்தில் விவாதிக்கப்பட்ட 1995 ஆம் ஆண்டு வக்பு சட்டம் நடைமுறைக்கு வந்தது.

அதேபோல் 2013 ஆம் ஆண்டு கொண்டுவரப் பட்ட வக்பு சட்டத்தின் அடிப்படை என்ன? அச்சட்டத் தின் ‘காரணங்கள் மற்றும் நோக்கங்களின்’ பத்தி இரண்டை படியுங்கள்:

**“இந்திய முஸ்லிம் சமூகத்தின் சமூக, பொருளா தார மற்றும் கல்வி நிலைகுறித்த விரிவான அறிக் கையைத் தயாரிப்பதற்காக ஒரு உயர்மட்டக்குழு அமைக்கப்பட்டது, அதன்அறிக்கையை நவம்பர் 17, 2006 அன்று பிரதமரிடம் சமர்ப்பித்தது, இது ‘சச் சார்குழு அறிக்கை’ என்றுஅழைக்கப்படுகிறது”**

எனவே. 1984, 1995, 2013 ஆண்டுகளில் நிறைவேற்றப்பட்ட சட்ட திருத்தங்கள் மூன்றிலுமே அடிப்படையான சட்டக் காரணங்கள் இருந்தன; விவாதங்கள் நடந்தன; பின்னர் ஒரு வெள்ளைஅ றிக்கை நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்யப்பட் டது. ஒருமித்த கருத்து எட்டப்பட்டது. பின்னிட்டு, அரசாங்கம் திருத்தங்களைக் கொண்டு வந்தது. நான் கேட்கிறேன் தயவுசெய்து இந்தமசோதா எந்த அடிப்படையில் சபைக்குக் கொண்டுவரப்படுகிறது என்பதைச் சொல்லுங்கள்.

இந்த சட்டத்தை கொண்டுவர வேண்டிய அவசி யமான காரணங்களை உங்களுக்கு வகுத்தளித் தது யார் என்று நீங்கள் கூற முடியுமா? எத்தனை அமைப்புகள் நாடாளுமன்ற கூட்டுக் குழுவில் உங்கள் கூற்றுக்களை உறுதிப்படுத்தினர்? எவ ரும் இல்லை. எனவே, இந்த மசோதா கொண்டுவ ரப்பட்டு செயல்படுத்தப்பட்ட விதம் கள்ளத்தனமாக வும் கபடமும் கூடியதாக இருக்கிறது. தற்போதைய மசோதாவின் ‘நோக்கம் மற்றும் காரணங்களின் அறிக்கையின்’ பத்தி இரண்டு இவ்வாறு கூறுகிறது:

### சச்சார் கமிட்டி அறிக்கை!

**“ஓய்வுபெற்ற நீதிபதி ராஜீந்தர் சச்சார் தலைமை யில் உயர்மட்டக் குழுவின் பரிந்துரைகள், வக்பு மற் றும் மத்திய வக்பு கவுன்சில் மீதான நாடாளுமன்ற கூட்டுக்குழுவின் அறிக்கையின்அடிப்படையில், மற்ற அமைப்புகளுடன் விரிவான ஆலோசனைக்குப்பிறகு, 2013 ஆம் ஆண்டில் சட்டத்தில் விரிவான திருத்தங்கள் செய்யப்பட்டன.”** இதுஅரசாங்கத்தின்ஒப்புதல்!

பிறகு, அதே பத்தியில் என்ன சொல்லப்பட்டிருக் கிறது?

“அந்த திருத்தங்கள் இருந்தபோதிலும், வக்பு வாரியத்தின்அதிகாரங்கள் (Powers of State Boards), பதிவுசெய்தல் (Registration), சொத்துக்க ளின் கணக்கெடுப்பு (Survey of properties), ஆக்கிர மிப்புகளை அகற்றுதல் (Removal of encroachments), வக்பு வரையறை (Definition of Waqf) உள்ளிட்டவைகளில் உள்ள சிக்கல்களை திறம்பட நிவர்த்தி செய்ய சட்டம் இன்னும் செம் மைப்படுத்தப்பட வேண்டும்” என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த ஐந்து கூறுகளை நீங் கள் குறிப்பிட்டுள்ளீர்கள். 2013 சட்டத்துடன் சச்சார் குழு அறிக்கை முந்தைய சட்டத்தில் விடுபட்டிருந்த ஐந்து கூறுகளை நீங்கள் மேற்கொள்ள விரும்பியதாக சொன்னீர்கள். இப்போது, இந்த ஐந்து கூறுகளுக்கு வருகிறேன்.

### ‘வக்பு’ என நீங்கள் வரையறை செய்வது வக்பு இல்லை!

‘வக்பு’ என நீங்கள் வரையறை செய்வது வக்பு இல்லை, மக்களை தந்திரமாக குழப்பு வதைத் தவிர வேறு எதுவும் இல்லை என்பதை நான் எளி தாக நிரூபிக்கமுடியும். ‘ஆக்கிரமிப்பை அகற்றுதல்’ என்பது அரசாங்கம், வக்பு சொத்தை அபகரிக்க அர சுக்கு அதிகாரம் அளிப்பதைத் தவிர வேறில்லை. ‘சொத்துக்கள் அளவை கணக்கெடுப்பு’ என்பது ஒரு கேலிக்கூத்து. ஏனென்றால் இந்திய அரசு ஏற்க னவே 90 சதவீதத்திற்கும் அதிகமான வக்பு வாரிய சொத்துக்களை அளவை செய்து முடிந்துவிட்ட தாக உச்சநீதிமன்றத்தில் பிரமாணப்பத்திரம் தாக்கல் செய்துள்ளது.

### உங்கள் முயற்சியை தோலுரித்துக் காட்டுவேன்!

உங்கள் உரையின்படி, ‘வக்புபதிவு’ என்பது நடைமுறையில் சாத்தியமில்லை. ‘மாநில வக்பு வாரியங்களின்அதிகாரங்களை’ மேம்படுத்துவது அதை ஒரு கேளிக்கை அரங்காக மாற்ற முயற்சிப்பது!. இந்த குற்றச்சாட்டு களின் மூலம் இங்கே உங்கள் முயற்சியை தோலுரித்துக் காட்டு வேன். ஒரு சட்ட மாணவனாக, இந்த சட்ட திருத் தங்களைக் கண்டபோது நான் வேதனையடைந் தேன்; மேலும் 2013 ஆம் ஆண்டு சட்டத்திற்கு அப்பால் இந்த ஐந்து தலைப்புகளின் அடிப்படை யில் ஏதாவது ஒரு முன்னேற்றத்தை இந்த மசோதாவில் காட்டுமாறு அமைச்சரிடம் உரிய பணிவுடன் நான் சவால் விடுகிறேன். அவர்அவ் வாறு செய்தால், நான்அவரை வணங்கத் தயாராக இருப்பேன். ஆனால் நீங்கள் அதைச் செய்ய முடி யாது; அது உங்கள் நோக்கம் அல்ல. நான் 22 ஆண்டுகளுக்கும் மேலாக நாடாளுமன்றத்தில் உறுப்பினராக இருக்கிறேன். நாடாளுமன்றத்தின் சட்டமியற்றும் முறைகளை நான்அறிவேன். ஒரு வழக்கறிஞராக, அதன் அனைத்து நுணுக்கங்களையும் நான் நன்குஅறிவேன்.

### திருட்டுத்தனமாக மசோதா கொண்டு வரப்பட்டுள்ளது!

1995 மற்றும் 2013 ஆம் ஆண்டுகளில் உரிய விவாதத்திற்குப் பிறகு, அதே நாடாளுமன்றத்தின் ஒப்புதலுடன் கொண்டுவரப்பட்ட நல்ல திருத்தங்களை நீக்குவதற்காக ‘தந்திரமாகவும்’ ‘அதிபுத்திசாலித்தனமாகவும்’ அதே நாடாளு மன் றத்தில் திருட்டுத்தனமாக இந்த மசோதா கொண்டு வரப்பட்டுள்ளது. இந்த கேலிக்குரிய செயலை நீங் கள் எப்போதாவது கண்டிருக்கிறீர்களா?

நீங்கள் உண்மையிலேயே நேர்மையானவ ராக இருந்தால், 2013 சட்டத் திருத்தத்தை ரத்து செய்திருக்க வேண்டும்!. 1995 சட்டத் திருத்தத்தை ரத்து செய்திருக்க வேண்டும். ஏனெனில் 1995 இல் கொண்டுவரப்பட்ட பெரும்பாலான திருத்தங்கள், பின்னர் 2013 இல் கொண்டுவரப் பட்ட திருத்தங்கள் யாவும் இந்த சட்டத்திருத்தத்தின் மூலம் முற்றிலுமாக நீக்கப்பட்டுள்ளன. அதற்கு இதே நாடாளுமன்றத்தை பயன்படுத்துகிறீர்கள்! நாடறிந்த சட்டவல்லுனரான நீதியரசர் வி.ஆர். கிருஷ்ணஐயரை மேற்கோள் காட்ட விரும்புகிறேன். அவர் குறிப்பிட்டார் “நாடாளுமன் றம் என்பது தேசத்தின் ஒரு சிறந்த விசாரணை மையம் Inquest of the Nation), நிர்வாகத்தின் சிறந்த தணிக்கையாளர் (Auditor) மற்றும் குறை தீர்ப்பாளர் (Ombudsman), இறுதி நடுவர் (Final Orbitor), கொள்கை கண்காணிப்பாளர் (Policy Monitor) மற்றும் மக்களின் எதிர்காலத்தை வடிவ மைக்கும் கலைஞர் Destiny designer)” அப்படிப் பட்ட நாடாளுமன்றம் இன்று வெறும் காற்றோட்ட மண்டபமாக (Ventilating Chamber) மட்டுமே உங் களால் பயன்படுத்தப்படுகிறது; குறை மதிப்பிற்கு உட்படுத்தப்பட்டுள்ளது; என்று நான் அரசாங் கத்தை துணிவுடன் குற்றம்சாட்டுறேன். இது அரசி யலமைப்பின் மீது நடத்தப்படும் மன்னிக்க முடி யாத படுகொலைத் தாக்குதலேத் தவிர வேறில்லை; இதற்காக ஒருநாள், நீங்கள்வருந்துவீர்கள்!

இப்போது, மசோதாவின் புதிய சட்டப்பிரிவு களை பற்றி ஆராய்வோம். திரிணாமுல் காரங்கி ரஸ் கட்சியின் திரு. கல்யாண் பானர்ஜி, சமாஜவ்hதி கட்சியின் தலைவர் திரு.அகிலேஷ் யாதவ் உள் ளிட்ட எனது நண்பர்கள், “குறைந்தது ஐந்து வரு டங்களாக இஸ்லாமியத்தை கடைப்பிடிக்கும் ஒரு வர்தான் வக்பு அமைப்பை ஏற்படுத்த - நிர்வகிக்க தகுதியானவர்” என்ற விதியைப்பற்றி குறிப்பிட்டனர். அதுமட்டுமல்ல, யாரும் ‘குறுக்குவ ழித் தந்திரத்தில்’ Contrivance) ஈடுபட்டிருக்கக்கூ டாது என்றும் குறிப்பிட்டுள்ளீர்கள். உங்களிடம் இந்த ‘சொல்லாடல்கள்’ எல்லாம் எங்கிருந்து வந் தது? நான் சட்டப்படியான ஒரு இந்து. நான் ஒரு மத நம்பிக்கையானவனாக இருக்கலாம், மத நம்பிக் கையற்றவனாகவும் இருக்கலாம். ஆனால் என் னிடத்தில் ஒரு சொத்தை ஒப்படைக்கும்போது, என் நேர்மையை நீங்கள்அளவிடுவீர்களா? என் மத நம்பிக்கையை அளவிடுவீர்களா? நான் நேர்மை யைப் பற்றி அக்கறை இல்லாத ஒரு மோசடி செய்ப வன் என்றால், அதை ஏற்பீர்களா? நீங்கள் நேர்மை மற்றும் வெளிப்படைத்தன்மை பற்றி ஒரு போதும் கவலைப்படுவதில்லை. நீங்கள் மதத் தைப்பற்றி மட்டுமே கவலைப்படுகிறீர்கள். அது தான் உங்கள் பிரச்சனை. வேறு எந்த நாட்டின் சட்டத்திலும் இதுபோன்ற ஒருவிதியை நான்பார்த்த தில்லை. ஒருவரின் நேர்மையை நீங்கள் எப்படி மத அடிப்படையில் அளவிட முடியும்?

(குறுக்கீடுகள்)

**தயாநிதி மாறன்:** (மத்திய சென்னை எம்.பி): பேரவைத் தலைவர் அவர்களே, அதிக குறுக்கீடுகள் உள்ளன. நாடாளுமன்ற கூட்டுக்குழு வில்கூட அவரால் பேசமுடியவில்லை.

(குறுக்கீடுகள்)

**ஆ.இராசா:** அரசாங்கம் தொடங்கியிருக்கும் இந்த சட்டத்திருத்த முயற்சியில் கெட்ட உள்நோக் கம் இல்லை என நீங்கள் கூறினீர்கள்; ஆனால் உங்கள் முழு முயற்சியும், ஒரு கொடூரமான திட்ட மிட்ட சூழ்ச்சி (Diabolical contrivance), அருவருப் பானது என்பதைத்தவிர வேறில்லை என்று நான் குற்றம் சாட்டுகிறேன். பிறகு நீங்கள் சில புதிய வாக் கியங்களைச் இந்த சட்டத்திருத்தத்தின் பிரிவு 3ஏ வில் சேர்த்துள்ளீர்கள். உண்மையான மற்றும் அசல் உரிமையாளர் ஒருவர் மட்டுமே தன் சொத்தை ‘வக்பு’க்கு தானம் செய்ய முடியும் என்று இதில் கூறப்பட்டுள்ளது. இது என்ன நகைப்பாக இல்லையா? உரிமையாளர் மட்டுமே சொத்துக் களை விற்க மாற்ற முடியும். உரிமை அல்லாத ஒருவர் சொத்தை மாற்றினால், அது மாற்றமா காது, அது சட்டப்படி செல்லாது. நான் என் சொந்த பணத்தை செலவிட முடியும், ஆனால் நான் என் நண்பனிடமிருந்து பணத்தை பறித்துக் கொண் டால், அது திருட்டுத்தனமானது. நீங்கள் ஏன் இப் படி ஒரு சட்டப்பிரிவைக் கொண்டு வருகிறீர்கள்? எனக்கு அதைப்புரிந்து கொள்ள முடியவில்லை. (சிரிப்பலை)

(குறுக்கீடுகள்)

## வக்பு சொத்துக்களை அரசாங்கம் இஸ்லாமியர்களிடமிருந்து பறிப்பதா?

தொடர்ச்சி 6ஆம் பக்கம்